

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.03.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கரூர் மாவட்டம், இனாம் கரூரில் 38.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம், நத்தம்பண்ணை கிராமத்தில் 36.78 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகரத்தில் 43.78 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மூன்று புதிய டைடல் நியோ பூங்காக்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எஸ். ரகுபதி, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் முகம்மது ஷா நவாஸ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் நியோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# போதிய எரிவாயுவை உறுதி செய்ய வேண்டுமென முதல்வர் எழுதிய கடிதத்தை வழங்கி ஒன்றிய அமைச்சரிடம் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



**புதுடெல்லி, மார்ச் 13-**

**மின் உற்பத்தி நிலையங்களுக்கு போதிய எரிவாயுவை உறுதி செய்ய வேண்டும் என்று ஒன்றிய பெட்ரோலிய துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியை சந்தித்து தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி, தமிழ்நாடு முதலமைச்சர் எழுதிய கடிதத்தை நேரில் வழங்கி வலியுறுத்தி உள்ளார்.**

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிவாயு விநியோகத்தை கடந்த ஆறு மாத சராசரி அடிப்படையில் 65% ஆகக் குறைக்கும் முடிவை ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதனை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

கோடைக் காலத்தில் மின்சாரத் தேவை உச்சத்தில் இருக்கும். எனவே, குளிர்காலத்தை தவிர்த்து கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்த எரிவாயு நுகர்வில் 65% என்ற அளவை நிர்ணயிப்பது என்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். கோடைகால உச்சகட்டத் தேவையின் போது போதிய மின் உற்பத்தியை உறுதி செய்ய இது உதவும்.

எரிவாயு விநியோகக் குறைப்பு காரணமாக ஓட்டல்கள் உள்ளிட்ட வணிக நுகர்வோர், எரிவாயு பயன்பாட்டிலிருந்து மின்சாரப் பயன்பாட்டிற்கு மாறும் வாய்ப்புள்ளது. இந்த மாற்றம் உச்சகட்ட மின்சாரத் தேவையை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, கோடைகால மின் விநியோக தேவையை கருத்தில் கொண்டு மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிவாயு ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் முறையை மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்.

ஒன்றிய பெட்ரோலிய துறை அமைச்சரை டெல்லியில் சந்தித்த திமுக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி, முதலமைச்சரின் கடிதத்தை ஒன்றிய அமைச்சரிடம் நேரில் வழங்கி வலியுறுத்தினார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்க பாண்டியன், செல்வகணபதி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2026) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 133 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்புகளுடன் இரண்டு தொகுதிகளாக கட்டப்பட்டுள்ள 700 குடியிருப்புகள் கொண்ட முதல்வர் நகர்புற குடியிருப்புகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், எபிநேசர், ஆர்.டி.சேகர், துணை மேயர் மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அமெரிக்காவிடம் பிரதமர் மோடி சரணடைந்துவிட்டார் – எதிர்க்கட்சிகள் முழக்கம்!

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு: நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி தி.மு.க. நோட்டீஸ்!

## மக்களவையில் டி.ஆர்.பாலு – மாநிலங்களவையில் திருச்சி சிவா அளித்தனர்!





**புதுடெல்லி, மார்ச் 13-**

**நாட்டில் ஏற்பட்டுள்ள சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி தி.மு.க. சார்பில் இரு அவைகளிலும் நோட்டீஸ் அளிக்கப்பட்டது. மக்களவையில் டி.ஆர். பாலுவும், மாநிலங்களவையில் திருச்சி சிவாவும் நோட்டீஸ் அளித்தனர்.**

தமிழ்நாட்டில் ஓட்டல்களிலும், வீடுகளிலும் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு தொடர்பாக பிரதமருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார் என்றும் நோட்டீஸில் டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்க ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் டி.ஆர்.பாலு வலியுறுத்தினார்.

இந்நிலையில், சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து விவாதிக்க இரு அவைகளிலும் அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கு கண்டனம் தெரிவித்து மக்களவையில் தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட், வி.சி.க. உள்ளிட்ட கட்சிகள் முழக்கமிட்டன. தமிழிலும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அப்போது, சமையல் எரிவாயு பிரச்சினைக்கு ஒன்றிய அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினர். இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

**ராகுல் காந்தி குற்றச்சாட்டு!**

மக்களவையில் சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. விவாத்தில் பங்கேற்று பேசிய ராகுல் காந்தி, பிரதமர் மோடி அமெரிக்காவிடம் சரணடைந்து விட்டது குறித்து மக்களவையில் பேச பலமுறை தாம் முயற்சித்ததாக கூறினார். ஆனால் எதிர்க்கட்சியினரை பேச விடாமல் சபாநாயகர் ஓம்பிர்லா தடுத்து விட்டதாக குற்றம்சாட்டினார். நாடாளுமன்றம், அனைவருக்குமானது என்றும் ஒரு குறிப்பிட்ட கட்சியினருக்கு மட்டுமானது அல்ல என்றும் ராகுல்காந்தி கூறினார். நாடாளுமன்றத்தில் பிரதமர் குறித்து பேச ஆரம்பித்தாலே தம்மை அமைதியாக்கி விடுவதாக வும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி விமர்சித்தார்.

**மாநிலங்களவை**

சமையல் எரிவாயு தட்டுப்பாடு விவகாரம் மாநிலங்களவையிலும் எதிரொலித்தது. அப்போது, சமையல் எரிவாயு தட்டுப்பாடு குறித்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று திருச்சி சிவா வலியுறுத்தினார். அனைத்து வகையான சிலிண்டர் தட்டுப்பாடுகளையும் போக்க ஒன்றிய அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் மாநிலங்களவையிலும் அமளி நிலவியது.

**எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!**

இதற்கிடையே, சிலிண்டர் தட்டுப்பாட்டைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்காவுடன் மோடி அரசு செய்து கொண்ட சமரசமும், டிரம்ப்பின் மிரட்டலுக்கு அடி பணிந்து, ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைத்ததும்தான் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு காரணம் என குற்றம்சாட்டினர். சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

## மாவட்ட இளைஞர்அணி சார்பில் முதல்வர் பிறந்த நாள் விழா!

# திருத்துறைப்பூண்டியில் கருத்தரங்கம்!

## சூர்யா கிருஷ்ணமூர்த்தி - திருவாரூர் தினேஷ் விளக்கவுரை!

*திருவாரூர், மார்ச் 13 -*

*திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில், மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் ஆலோசனைகளின்படி, கழகத்தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, மாவட்ட இளைஞர்அணி துணை அமைப்பாளர் வினோத்குமார் ஏற்பாட்டில், திருத்துறைப் பூண்டி நகரப்பகுதியில் இளைஞர்களுக்கான திராவிட இயக்க கருத்தரங்கமும், கழக இளைஞர்அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர்அணி நிர்வாகிகளுக்கு “காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு” புத்தகமும் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.*

*தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் தலைமையில் நடைபெற்ற விழாவில், மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார், தொகுதி பொறுப்பாளர் சௌமியன் வைத்தியநாதன், நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், மாவட்ட இளைஞர்அணி துணை அமைப்பாளர் தாகிர் அலி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பாஸ்கர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.*

*“தொடரட்டும் திராவிட மாடல் 2.0.” தலைப்பில் கழக செய்தி தொடர்பு துணை செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு புத்தகத்தை திருவாரூர் தினேஷ் அவர்களும் அறிமுகம் செய்து பேசினார்.*

*மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வினோத்குமார் வரவேற்புரையும், நகர அமைப்பாளர் நகர்மன்ற உறுப்பினர் வசந்த நன்றியும் கூறினார். நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி எஸ். பி.பாஸ்கர், ஐ.ஜி.எஸ். ஜாகிர் உசேன், வீரமணி, மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் சிவசங்கரி, சரண்யா, ஒன்றிய துணை செயலாளர் சேதுமுருகானந்தம், சுற்றுசூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஓம் சக்தி கண்ணன், விவசாய அணி மாவட்ட தலைவர் அசோகன், துணை அமைப்பாளர் வீரசேகரன் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.*



தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக சேலம் கோட்ட தலைமை அலுவலகத்தில் 11.03.2026 அன்று நடைபெற்ற விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதிய பணப்பலன்களை வழங்கினார்கள். உடன் போக்குவரத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஷீன்சோங்கம் ஜடக் சிரு, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநர் குணசேகரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## தேர்தல் பணிகளில் கவனம் செலுத்துவதைத் தவிர்த்து,

# மக்களின் அன்றாடத் தேவைகளில் கவனம் செலுத்துமா மோடி அரசு?

## தயாநிதி மாறன் எம்.பி. சமூகவலைதளப் பதிவு!



சென்னை, மார்ச் 13-

விறகு அடுப்பின் வெப்பத்தில் அழுத ஏழைப் பெண்களின் கண்ணீரை LPG மூலம் துடைத்து விட்டேன்’ என்று பிரதமர் அவர்கள் பலமுறை பெருமிதம் கொண்டார். அனால் தற்போது கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் நாடு முழுவதும் பொதுமக்கள் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகி வருகின்றனர். LPG தட்டுப்பாட்டால் தற்போது உணவகங்களும் மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது நீடித்தால் விரைவில் முழு நாடும் விறகு அடுப்புக்கு திரும்ப வேண்டிய நிலை வருமோ? என அச்சத்தில் மக்கள்!

மக்களின் அச்சத்தை போக்கிட, தேர்தல் பணிகளில் கவனம் செலுத்துவதை தவிர்த்து, மக்களின் அன்றாட தேவைகளில் கவனம் செலுத்துமா மோடி அரசு என்று மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் X தளத்தில் பதிவில் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் துணை முதல்வர் அவர்களின் தருமபுரி மாவட்ட வருகையையொட்டி நடைபெற்ற அவசர செயற்குழு கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் விழா முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். உடன் கே.மனோகரன், சூடப்பட்டி.சுப்பிரமணி, சத்தியமூர்த்தி, டி.எம்.அரியப்பன், முருகன், ராஜகுமாரி மற்றும் ஏராளமான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.